பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**12 12 2025** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. இந்தியா — நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தகத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் ரயில் விபத்துகள் **90** சதவீதம் குறைந்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனில் திரிலோக் இசைக்குழுவின் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப இசையை பயன்படுத்தவில்லை என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. சிக்கிம் மாநிலத்தில் **12** சமூக பிரிவினருக்கு ஷெட்யூல்டு பழங்குடியின அங்கீகாரம் அளிப்பதற்கான மசோதா அம்மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

5. ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Sathwik Reddy — Reshika Uthayasooriyan** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

இந்தியா — நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தகத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நியூசிலாந்து வர்த்தகத்துறை அமைச்சர் Todd McClay-வுடன் ஆலோசனை மேற்கொண்டபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வர்த்தக உறவுகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டில் ரயில் விபத்துகள் 90 சதவீதம் குறைந்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று எழுத்துமூலம் அளித்த பதிலில் இதனை கூறியுள்ள அவர், நடப்பு நிதியாண்டில் 11 ரயில் விபத்துகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ரயில் பயணிகளின் பாதுகாப்புக்காக ரயில்வே முன்னுரிமை அளித்து வருவதாக கூறிய அவர், இதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

ரயில்வே ஊழியர்கள், ரயில் பாதுகாப்புப் படையினர், ரயில்வே காவல்துறையினர் இணைந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு விபத்துகளை தவிர்த்திருப்பதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>>

நடப்பு நிதியாண்டில் மத்திய அரசின் கூடுதல் செலவினங்களுக்கான துணை மானியக்கோரிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்தார்.

ஒரு லட்சத்து 32 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் செலவினங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கோரி இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

உர மானியத்திற்காக செலவிடப்பட்ட 18 ஆயிரம் கோடி ரூபாயும் இதில் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் அரசு துறைகளின் கூடுதல் செலவினங்களுக்காக 90 ஆயிரத்து 812 கோடி ரூபாய் ஒதுக்கவும் இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விவாத்தில் பேசிய பிஜேபி உறுப்பினர் திரு ஜெதாம்பிகா பால், மத்திய அரசு விவசாயிகள் மற்றும் எழைகளின் நலன்களுக்காக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் மற்றும் உர மானியம் திட்டம் மூலம், விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கோதுமை மற்றும் நெல் உற்பத்தி வரலாற்று சாதனை படைத்துள்ளதாகவும் திரு ஜெதாம்பிகா பால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் விமான போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் விமானங்களை தயாரிக்கும் முயற்சியை மத்திய அரசு மேற்கொள்ள உள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், ரஷ்யாவின் சுகோய் விமான தயாரிப்பு நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் விமானங்கள் தயாரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனம் ஆய்வு செய்து வருவதாக கூறினார்.

விமான கட்டணங்களை முறைப்படுத்துவது குறித்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அசாதாரணமான சூழ்நிலைகளில் மட்டுமே

அதிகபட்ச விமான கட்டணத்தை நிர்ணயிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

அண்மையில், இண்டிகோ விமான நிறுவனத்தின் சேவைகள் பாதிக்கப்பட்டதையடுத்து, இந்த முயற்சியை அரசு மேற்கொண்டதாகவும் திரு ராம்மோகன் நாயுடு சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>

முறைகேடாக செயல்பட்ட ஆயிரத்து **184** மருத்துவமனைகள், ஆயுஷ்மான் பாரத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார, குடும்பநலத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் இதனை தெரிவித்த அவர், இந்த மருத்துவமனைகள் மீது **231** கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

மருத்துவத் துறையில், முறைகேடுகளை அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்றும் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இந்தியா — கென்யா இடையே சுற்றுச்சூழல் துறையில் உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய

சுற்றுச்சூழல் வனத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

கென்யாவின் நைய்ரோபியில் அந்நாட்டு சுற்றுச்சூழல் அமைச்சர் டாக்டர் **Deborah-**வை சந்தித்தபின் சமூக வலைதளத்தில் அமைச்சர் வெளியிட்டுள்ள செய்தியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலையான வேளாண்மை, பருவநிலை மாற்றம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

இந்தியா — கென்யா இடையே சுற்றுச்சூழல் துறையில் ஒருங்கிணைந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனில் திரிலோக் இசைக்குழுவின் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப இசையை பயன்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், பிரசார் பாரதியின் ஓ டி டி மற்றும் வேவ்ஸ் தளங்களில்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப இசையை பயன்படுத்துவதில்லை என்று தெரிவித்தார்.

நவராத்திரி பண்டிகையின்போது வேவ்ஸ் மற்றும் ஓ டி டி தளங்களில் சில செயற்கை நுண்ணறிவு இசைப் பதிவுகள் பயன்படுத்தப் பட்டதாகவும், தொடர்ச்சியாக இவற்றை பயன்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை என்றும் டாக்டர் எல். முருகன் தெளிவுபடுத்தினார்.

<<<<<<>>>>>>

மருத்துவத்துறையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை முறையாக பயன்படுத்தினால் இந்த துறை உயர் வளர்ச்சி பெறும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மருந்துப்பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் 7-ஆவது மாநாட்டில் உரையாற்றிய அவர், உயிரி தொழில்நுட்பம் மற்றும் மரபணு சிகிச்சை துறைகளில் தனியார் துறையுடன் இணைந்து அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

நோய் தடுப்புக்கான உயிரி மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஏற்றுமதியில் உலகளாவிய அங்கீகாரத்தை இந்தியா பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மருந்து பொருட்களை சந்தையில் விற்பனை செய்துவரும் நாடாக இருந்தநிலை மாறி தற்போது புதிய மருந்துகளை கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சியிலும் தீவிர கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

மருந்துப் பொருட்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் கண்டுள்ள வளர்ச்சியால் மருந்துப் பொருட்களின் சந்தை விரிவடைந்திருப்பதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், கேரளா, மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கான சிறப்பு பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இந்த பார்வையாளர்கள் தங்களது பணியை ஏற்கனவே தொடங்கியுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாரத்திற்கு இருமுறை ஆய்வு செய்யும் பணியை இவர்கள் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாகும் வரை மேற்கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில மற்றும் மாவட்ட அளவில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளின் கூட்டத்தை இவர்கள் நடத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு வழிநடத்துவார்கள் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

சிக்கிம் மாநிலத்தில் 12 சமூக பிரிவினருக்கு ஷெட்யூல்டு பழங்குடியின அங்கீகாரம் வழங்குவதற்கான மசோதா அம்மாநில சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து உயர்மட்டக்குழு ஆய்வு செய்து அளித்த பரிந்துரையின் அடிப்படையில் அம்மாநில அரசு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது.

<<<<<<>>>>>>

சட்டீஸ்கட்டின் சுக்மா மாவட்டத்தில் 10 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர். இவர்களில் 6 பேர் பெண்கள்.

செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அம்மாநில காவல்துறை **I G** திரு சுந்தர் ராஜ், சரணடைந்தவர்கள் தாங்கள் வைத்திருந்த **AK-47** ரக துப்பாக்கி, இரண்டு எஸ் எல் ஆர் துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகளை ஒப்படைத்ததாக கூறினார்.

சரணடைந்த நக்சலைட்டுகளின் மறுவாழ்வுக்கு உதவிடும் வகையில், தலா **50** ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Sathwik Reddy — Reshika Uthayasooriyan** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **21-15, 21-19** என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Nawaf Khoiriyansyah — Nahya Muhyifa** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Unnati Hooda** மற்றும் **Tasnim Mir** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் **Rounak Chouhan, Kiran George-** ஆகியோரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-----------

**19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 234 ரன் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வென்றது.**

**துபாயில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 433 ரன் எடுத்தது.**

**பின்னர் 434 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 199 ரன் மட்டுமே எடுத்தது.**

**<<<<<<END>>>>>>**